12.03.2026

அ.வ.எண். 820/2017

வா.சா.3 – திரு. கிருஷ்ணசாமி த/பெ. மாரப்பன்

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 12.03.2026 is accordance with the provision of Act X of 3331

**<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து எனக்கு அழைப்பாணை வரவில்லை. வாதி, சாட்சியம் அளிக்க அழைத்ததால் வந்துள்ளேன். நான் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள முகவரியில் வசித்து வருவதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆதார் கார்டு உள்ளது. எனது பிரமாண வாக்குமூலத்தில் வழக்கின் முழு விவரமும் தெரியும் என்று சொல்லியுள்ளேன். எனது பிரமாண வாக்குமூலம் பத்தி 3 ல், 1ம் பிரதிவாதி தோட்ட சொத்தின் எல்லைகளை மாற்றி கற்களை நட்டதால் பிரச்சனை ஏற்பட்டது என சொல்லியுள்ளேன் என்றும், அது எந்த இடம், எந்த ஊர், எந்த தேதி மற்றும் எந்த காலை என்ற விவரத்தை நான் சொல்லவில்லை என்றால் சரிதான். கேட்கும்போது சொல்ல சொன்னார்கள். அனைத்தையும் எழுதி வர முடியாது, குறுக்குவிசாரணையில் சொல்லிக்கொள்ளலாம் என விட்டுவிட்டேன்.

2. எனது பிரமாண வாக்குமூலம் பத்தி 3 ல், சென்னிமலை கவுண்டர் இருக்கும்வரை எந்த பிரச்சனையும் இல்லை என சொல்லியுள்ளேன் என்றும், சென்னிலை கவுண்டர் எங்கு, எந்தெந்த சொத்துக்களை அனுபவம் செய்து வந்தார் என சொல்லவில்லை என்றால் சரிதான். குட்டத்தோட்டம், எரந்தோட்டம் அவர் தான் வைத்திருந்தார்.குட்டத்தோட்டம், எரந்தோட்டம் குறித்து சென்னிமலை கவுண்டர் எந்த ஏற்பாடும் செய்யாமல் இறந்துவிட்டாரா என்றால் இல்லை. சென்னிமலை கவுண்டர் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் பொறுத்து, பாகப்பிரிவினை செய்து காலமாகிவிட்டார் என்றால் ஆமாம்.

3. 1ம் பிரதிவாதிக்கு எரந்தோட்டம் ஒதுக்கப்பட்டது. சென்னிமலைகவுண்டர், கந்தசாமி, பழனிச்சாமி ஆகியோருக்கு குட்டத்தோட்டம்

பாகம் ஒதுக்கப்பட்டது. மேற்படி பாகப்பிரிவினைக்கு பின்னிட்டு, 5 – 6 வருடங்கள் கழித்து சென்னிமலை கவுண்டர் இறந்துவிட்டார். பாகம் பிரிக்கப்பட்ட பின்னிட்டு, மேற்படி சொத்துக்களை ஆவணத்தில் கண்டவாறு அனுபவம் செய்து வந்தனர் என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினையில் உள்ள எல்லைகள் தவறானது என சென்னிமலை கவுண்டர் தனது மக்களான 1ம் வாதி, 1ம் பிரதிவாதி மற்றும் பழனிச்சாமி ஆகியோர்களிடம் எவ்வித பிரச்சனையும் செய்யவில்லை என்றால் சரிதான்.

4. சென்னிமலை கவுண்டருக்கு எவ்வளவு நிலம் ஒதுக்கப்பட்டது என்றால் சுமார் 2 ஏக்கர் இருக்கும். எதன் அடிப்படையில் 1ம் பிரதிவாதி தோட்ட சொத்தின் எல்லைகளை மாற்றி கற்களை நட்டதால் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சென்னிமலை கவுண்டரின் பாகத்தை அவர் வாங்கியுள்ளார். சென்னிமலை கவுண்டர் தான் 1ம் பிரதிவாதிக்கு சொத்தை தானம் கொடுத்தார் என்றால் சரிதான். சென்னிமலை கவுண்டர் தனக்கு பாகப்பிரிவினையில் ஒதுக்கப்பட்ட சொத்துக்களை அவர் அடைந்து அனுபவம் செய்து வந்து அவ்வாறே 1ம் பிரதிவாதிக்கு தானம் எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். ஆனால் எழுதி கொடுத்ததில், 1ம் பிரதிவாதி கிழமேலாக சொத்தை அகலப்படுத்தி கொண்டார். வாதி அழைத்ததன் பெயரில் பஞ்சாயத்து சென்றேன் என்றால் ஆமாம். பங்காளிகள் எல்லோரும் வந்தனர்.

5. சென்னிமலைகவுண்டரின் ஆவணங்களை நான் வாங்கி பார்த்தேனா என்றால் இல்லை. நான் தோட்டத்திற்கு சென்று அதை பார்த்துள்ளேன். வழக்கு சொத்து சம்மந்தமாக வேறு வழக்கு உள்ளதா என்றால் கந்தசாமி, சுப்பிரமணியம் மீது தாக்கல் செய்துள்ளார். மேற்படி விவரம் பற்றி எனக்குதெரியும். மேற்படி வழக்கில் யாருக்கு சாதகமாக தீர்ப்பானது என்றால் எனக்கு தெரியாது. அ.வ.எண்.107/2017 வழக்கு 1ம் பிரதிவாதிக்கு ஆதரவானது என்றும் மேற்படி விவரம் எனக்கு தெரியும் என்றால் மேல்முறையீடு சென்றிருப்பதாக வாதி சொன்னார். மேற்படி சொத்து சம்மந்தமாக தான் இந்த வழக்கு நடைபெறுகிறது என்றால் ஆமாம்.

6. எல்லைக்கற்களை மாற்றிவிட்டதாக சொல்லி பங்காளிகளுடன் சென்று பார்த்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நாங்கள் போய் கேட்டபோது சொத்துபிரச்சனை கேட்டு யாரும் வர வேண்டாம் என பிரதிவாதி சுப்பிரமணியம் சொன்னார். எனது பிரமாண வாக்குமூலத்தில், எத்தனை நபர்கள் சென்றோம் என்றும், எங்கு வைத்து பேசினோம் என்றும், சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு திருமணம் ஆகி 3 குழந்தைகள் உள்ளனர். எனது 3 வது மகன் 2 ம் வாதி துரைராஜ் அவர்களின் நிறுவனத்திற்கு வேலைக்கு செல்கிறார் என்றால் ஆமாம். எனது பிரமாண வாக்குமூலத்தில் சென்னியாண்டவர் கோவில் எந்த காலையில், எந்த ஊரில் உள்ளது என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான், காடாம்பாடி எரந்தோட்டத்தில் கோவில் உள்ளது.

7. எனது தாத்தா சென்னிமலையாண்டவர் கோவிவில் பூசாரியாக இருந்தார் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிக்கும் மேற்படி விவரம் தெரியும். எனது பிரமாண வாக்குமூலத்தில், என் தாத்தா சென்னிமலையாண்டவர் கோவிலில் பூசாரியாக இருந்தார் என சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். கோவில் எங்களுக்கு சொந்தமானது என்றால் பங்காளிகள் அனைவருக்கும் சொந்தமானது, அதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நூற்றாண்டு காலமாக கும்பிட்டு வருகிறோம். வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரத்தில், வாதி மற்றும் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட குடும்ப சொத்து என குறிப்பிட்டுள்ளது தவறு என்றால் வாதி மற்றும் பிரதிவாதிகளுக்கு மட்டும் சொந்தமானது அல்ல, கல்லாங்காடு, கணக்கந்தோட்டம் பங்காளிகளுக்கும் சொந்தமானது.

8. எனது பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 5 ல், 1 ம் பிரதிவாதிக்கு எந்த உரிமையும் இல்லாமல் எங்கள் கோவிலுக்கு செல்லும் வழியை மறித்து வழக்கு நிலுவையில் இருக்கும்போது கட்டிடம் கட்டியுள்ளார் என சொல்லியுள்ளேன் என்றும், 1ம் பிரதிவாதிக்கு கோவிலில் உரிமை உள்ளதா என்றால் உள்ளது, அனைவருக்கும் உரிமை உள்ளது. 1ம் பிரதிவாதி வழக்கு நிலுவையில் இருக்கும்போது கட்டிடம் கட்டியுள்ளார் என சொல்லியுள்ளேன் என்றும், எந்த

வழக்கு என்றால் குட்டத்தோட்டம், வழக்கு சம்மந்தமாக பேசி கொண்டிருந்தோம், மேற்படி வழக்கு சம்மந்தமாக பேசி கொண்டு வந்தால் வழி விட மாட்டோம் என சொல்லிவிட்டார். ஒருதலைபட்சமாக பேசிக்கொண்டு வராதீர்கள் என்று சொல்லிவிட்டார். 1ம் பிரதிவாதி சுப்பிரமணி எரந்தோட்டம் ராமசாமியிடம் இருந்து இடம் வாங்கி வீடு கட்டினார். 2014 - 2016 ஆண்டு வாக்கில் வீடு கட்டினார். மேற்படி இடத்திற்கு கிழபுறமாக உள்ள இடத்தை தடுத்துவிட்டார். அந்த இடம் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது.

9. தடம் எந்த காலையில் செல்கிறது என அறுதியிட்டு சொல்ல முடியாது என்றால் சரிதான். ஆண்டாண்டு காலமாக போய் கொண்டிருக்கிறோம். வாதி தடம் சம்மந்தமாக தாக்கல் செய்துள்ள ஆவணத்தை படித்து பார்த்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை ஆவணத்தின் பக்கம் 5 ல், வாதியும், பிரதிவாதியும் எவ்வாறு தடம் அனுபவிப்பது என குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். பழனிக்கவுண்டன் பூமியில் கிழகோட்டில் தென்வடலாக செல்லும் வண்டித்தடத்தை பயன்படுத்தி கொள்ள வேண்டியது என வாசகம் கண்டுள்ளது என்றால் சரிதான். அது கோவிலுக்குரிய பாதை அல்ல.

10. எந்த காலைகளின் வழியாக வழக்கு சொத்தில் குறிப்பிட்டுள்ள வண்டித்தடம் செல்கிறது என குறிப்பாக சொல்ல முடியுமா என்றால் சரிதான். அனுபவத்தின் வாயிலாக சொல்ல முடியும், சுண்ணாம்பு கால்வாயில் இருந்து கிழக்கே, வடக்கே பீத்தோட்டம் வகையறா, ரோட்டிற்கு தெற்கே ராமசாமி வகையறாவும், கிழமேலாக சென்று தெற்கு திரும்பி திரும்பவும் கிழக்கே சென்று கோவிலை அடைய வேண்டியது. தற்போது சுண்ணாம்பு கால்வாய் இல்லை. வா.சா.ஆ.12 கிரய பத்திரத்தில், வாதிகளின் தடம் க.ச.எண்.310/2 காலைகளின் வழியாக செல்கிறது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். க.ச.எண்.310/2 காலைகளின் வழியாக உள்ள தடத்தை 1ம் பிரதிவாதி தடுக்கவோ, ஆக்கிரமிப்பு செய்யவோ இல்லை என்றால் தவறு. தடம் இல்லை என்று சொல்கிறார்.

11. 2ம் வாதி, கிரயம் பெற்ற பூமியில், ஏற்கனவே 1950 ஆண்டு வாக்கில் கண்டுள்ள, பழனிக்கவுண்டன் பூமியின் கிழகோட்டில், தென்வடலாக செல்லும் வண்டித்தடத்தை மறித்து பூமியாக மாற்றி விட்டு 1ம் பிரதிவாதியின் இடத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எனவே, 1950 ம் ஆண்டு கண்டுள்ள வா.சா.ஆ.10 ஆவணத்தின் படியும், வா.சா.ஆ.1 ஆவணத்தின் படியும் கண்டுள்ள தடத்தினை வாதிகள் உபயோகித்து கொள்ளலாம் என்றும், நான் வாதிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் மேற்படி தடத்தை மறைத்து பொய் சொல்கிறேன் என்றும், எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ள கூடாது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur